12.10.2023.

**HMOP. No. 83/ 20 23 ம.சா. 1 ராமநாதன் த/பெ.மாணிக்கம்**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ள விபரங்கள் பொய்யானது, அவதுரானது என்றால் இல்லை. இதற்கு உண்மையான விபரங்கள் கண்டு பதில் அளித்தால், திருமண உறவில் மேலும் விரிசல் ஏற்படும் என்ற அச்சத்தில் எதிர்மனுதாரர் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் மனைவிக்கு மூத்த சகோதரிகள் இருவர் உள்ளார் என்றால் சரிதான். அதில் ஒரு சகோதரியை பட்டுக்கோட்டையிலும், மற்றோரு சகோதரியை பள்ளத்தூரிலும் திருமணம் செய்து கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். என் மனைவியின் மூத்த சகோதரியின் திருமணம் பட்டுக்கோட்டையில் நடந்தது என்றால் தெரியாது. அவரது மூத்த சகோதிரியின் கணவர் பட்டுக்கோட்டையில் காய்கறி கடை வைத்து வியாபரம் செய்து வருகிறார் என்றால் அப்படிதான் சொல்கிறார்கள், ஆனால் அவர் நம்பூரணிப்பட்டியில் தான் இருக்கிறார். என் மனைவியின் சகோதரியின் கணவருக்கு நம்பூரணிப்பட்டியில் குடியிருக்க வீடு உள்ளதா என்றால் மாமானார் வீட்டில் உள்ளனர். நம்பூரணிப்பட்டிக்கும் எங்கள் ஊருக்கும் 10–15 கி.மீ தூரம் இருக்கும். எங்கள் திருமணத்திற்கு பிறகு நானும், எனது மனைவியும் இரண்டு மாதம் ஒன்றாக இருந்தோம், அதில் வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டும் தான் என்னுடன் இருப்பார். என் திருமணத்திற்கு முன்பு என் மனைவியின் குடும்பத்தை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. திருமணத்திற்கு பிறகு இந்த இரண்டுமாதக் காலத்தில் நான் என் மாமனார் வீட்டிற்கு எத்தனை முறை சென்றேன் என்றால் செல்லவில்லை. என் மனைவியின் மூத்த சகோதரியின் கணவர் எப்பொழுதும் என் மாமனார் வீட்டிலேயே இருப்பார் என நான் கூறுவது அவதூரான பொய் என்றால் இல்லை. என் மனைவியின் மூத்த சகோதிரியின் கணவரின் பெயர் மல்லிக்கண்ணு என்றால் சரிதான். மல்லிக்கண்ணுவின், சகோதரி,சகோதர்கள் பட்டுக்கோட்டையில் உள்ளார்கள் என்றால் சரிதான். மல்லிக்கண்ணுவிற்கு இரண்டு மகன்கள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். அவரது இரண்டு மகன்களும் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றால் சரியாக தெரியவில்லை, ஒருவருக்கு தற்போது 18 வயது இருக்கும், மற்றோருவருக்கு ஆகியிருக்க வாய்ப்பில்லை. மல்லிக்கண்ணு இருதய அறுவை செய்து கொண்டவர் என்றால் தெரியாது. அவர் இருதய அறுவை சிகிச்சை செய்தவர் என்பதும், தொடர்ந்து மருத்துவச்சிகிச்சையில் உள்ளவர் என்பதும் எனக்கு

தெரிந்தும் தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மல்லிக்கண்ணு என் மனைவியான எதிர்மனுதாரருக்கு தந்தை சானத்தில் உள்ளவர், ஆனால் அவருக்கு தவறான உறவு உள்ளது நான் அருவறுக்கத்தக்க வகையில் கூறுகிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.8 முதல் தகவல் அறிக்கையானது 01.12.2017 அன்று என் தகப்பனார் கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 26.11.2017 க்கு இரண்டு தினங்களுக்கு முன்பு என் சகோதரிக்கும் என் மனைவிக்கும் ஏற்பட்ட மனவருத்தத்தால் என் மனைவி அவரது தகப்பனார் வீட்டிற்கு சென்று இருந்தார் இல்லை. 24.11.2017, 25.11.2017, 26.11.2017 ஆகிய தினங்களில் என் மனைவி எங்கள் வீட்டில் இருந்தாரா என்றால் இல்லை. என் மனைவி எப்பொழுது அவரது தகப்பனார் வீட்டிற்கு சென்றார் என்றால் கடைசியாக 23.11.2017 அன்று வியாழக்கிழமை சென்றார். என் சகோதரி என் திருமண தேதியில் இருந்து இன்றைய தேதி வரை தன் மகனுடன் எங்கள் வீட்டில் தான் உள்ளார் என்றால் இல்லை. 26.11.2017 அன்று என் மனைவியை அவரது சகோதரரும், சகோதரியும் சமாதானப்படுத்திற்கு என் வீட்டிற்கு அழைத்து வந்தனர் என்றால் இல்லை, மல்லிக்கண்ணு எல்லோரும் சேர்ந்து எங்களை அடிக்கவே வந்தார்கள். சமாதானத்திற்கு வந்தவர்களை என் சகோதரியின் துர்போதனையின்படி நானும், என் குடும்பத்தார்களும் தான் என் மனைவியையும், அவருடன் வ ந்த இரு நபர்களையும் அடித்து, அவதூராக பேசினோம் என்றால் இல்லை, அவர்கள் தான் எங்களை அடித்தார்கள். நாங்கள் அவர்களை அடித்தும், அவதூராக திட்டியும் தனது திருமண வாழ்க்கையின் எதிர்காலத்தை கருதி எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, எங்களை அடித்துவிட்டு அவர்கள் தான் எங்களுக்கு முன்பு காவல் நிலையத்திற்கு சென்று நின்றனர். என் மனைவி தரப்பில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வாய்ப்புள்ளது என்பதால் என் சகோதரியின் துர்போதனையின்படி என் தகப்பனார் அவருக்கு தானே காயத்தை ஏற்படுத்திக்கொண்டு மருத்துவமனைக்கு சென்று படுத்துக்கொண்டார் என்றால் பொய்யானது. என் தகப்பனாரிடம் போலீசார் மருத்துவமனையில் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்ய போகிறார்கள் என்று அறிந்த எதிர்மனுதாரர் தவிர்க்க இயலாத காரணத்தினால் 01.12.2017 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் பொய்யானது. அந்த புகாரின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதுதான் ம.சா.ஆ–8 என்றால் இல்லை, அவர்கள் வேண்டுமென்றே பொய்யாக புகார் கொடுத்தார்கள், அவர்கள்தான் முதலில் புகார் கொடுத்தார்கள். என் தகப்பனாருக்கு ஏற்பட்டதாக சொல்லும் காயச்சான்று இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஸ்கேன் ரிப்போர்ட் உள்ளது. ம.சா.ஆ. 9 ஆவணமானது என் தகப்பனார் தானே ஏற்படுத்திக்கொண்ட காயத்திற்கான எடுக்கப்பட்ட மருத்துவ விடுவிடுப்பு ஆவணம் என்றால் தனக்குத்தானே ஏற்படுத்திக்கொள்ளவில்லை. எங்கள் ஊரில் உள்ள

பெரிய விவாசயக்குடும்பத்தில் எங்கள் குடும்பமும் ஒன்று என்றால் இல்லை. சுமார் 30 ஏக்கருக்கு கூடுதலான நிலங்கள் எங்கள் குடும்பத்திற்கு உள்ளது என்றால் இல்லை, எவ்வளவு உள்ளது என்று எனக்கு தெரியாது. இந்த மனுவில் என் மனைவிக்கும், மகனுக்கும் இடைக்கால ஜீவனாம்சமாக தலா ரூ.4000/- கொடுக்கவேண்டுமென உத்தரவு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதனை எதிர்த்து மேல்முறையீடு உள்ளது. அந்த தலா ரூ.4000/- கொடுக்க வசதியில்லை என்று நான் மேல்முறையீடு செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் பெரும் வசதி படைத்தவர், அந்த தொகையை கொடுக்கக்கூடாது என்பதற்காக வசதி இல்லையென்று நீதிமன்றத்தில் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் M.Sc பட்டதாரி என்றால் சரிதான். திருமணத்தின்போது நானும், எனது பெற்றோரும் 60 சவுரன் தங்க நகை வரதட்சனையாக கேட்டு என் மனைவிக்கு திருமணத்தின் போது அவரது பெற்றோர் தரப்பில் அவருக்கு போடப்பட்டது என்றால் இல்லை, நாங்கள் கட்டாயப்படுத்தவில்லை. திருமணத்தின் போது 6 கிலோ வெள்ளி பாத்திங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் என் மனைவிக்கு வழக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை, சீதனமாக கொடுக்கப்பட்ட கட்டில், பீரோ, சில்வர், பித்தாளை பாத்திரங்கள் என் மனைவி கட்டி வைத்தப்படி எங்கள் வீட்டிலே உள்ளது. என் மனைவி சாதாரணமாக அணிந்து கொள்ளும் 10 சவுரன் தங்க நகைகள் தவிர, 50 சவுரன் தங்க நகைகள் எங்கள் வீட்டில் உள்ளது என்றால் இல்லை, என் மனைவி உள்நோக்கத்துடன் என்னிடமும், என் குடும்பத்தினரிடமும் வீண் சண்டை செய்து வந்ததாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு என்னை திருமணம் செய்ய விருப்பம் இல்லை, அவரது பெற்றோர் கட்டாயப்படுத்தியே என்னுடன் திருமணம் செய்து வைத்ததாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல, கட்டாயத்தினால் தான் திருமணம் நடந்தது. என் மனைவி என் வீட்டில் என்னுடன் தங்கி இருந்தபோது, மன நிம்மதி இல்லாமல் ,மன குழப்பத்துடன் இருந்து வந்தார் என்று நான் சொல்வதற்கு காரணமே என் சகோதரி அலட்சியமாகவும், அவமதிப்பாகவும் நடத்தியது என்றால் இல்லை. என் முதல் விசாரணை பிரமாணப்பத்திரிக்கையில் உள்ள பத்தி 6 யில் உள்ள எதிர்மனுதாரர் மற்றும் அவரது சகோதரியின் கணவர் மல்லிக்கண்ணன் பற்றி சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் மிகவும் அற்ப்பத்தனமான, அருவறுக்கத்தக்க பொய்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தான்தோன்றித்தனமாக, ஊதாரித்தனமாக, மனம்போனப்போக்கில் கட்டுப்பாடுடின்றி இருந்து வந்தார் என்றால் நான் கூறியுள்ளது பொய்யானது என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்பே என் மனைவிக்கு மல்லிக்கண்ணனுடன் தகாத உறவில் இருந்து வந்தார் என்பதும், என் குடும்பத்தினரையும், என்னையும் அவமரியாதை செய்வதை வழக்கமாக கொண்டிருந்தார் என கூறுவது பொய் என்றால் சரியல்ல. என் முதல் விசாரணை

பிரமாணப்பத்திரிக்கையில் பத்தி 8ல் சொல்லப்பட்டுள்ள நபர்கள் 26.11.2017ம் தேதியன்று எதிர்மனுதாரருக்கும், மல்லிக்கண்ணனுக்கும் இருந்ததாக சொல்லும் தவறான உறவை கண்டித்ததால் அவர்கள் வீட்டில் உள்ளவர்கள் வந்து தாக்கியதாக சொல்லியுள்ளது அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. என் முதல் விசாரணை பிரமாணப்பத்திரிக்கையில் பத்தி 9ல் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானது என்றால் சரியல்ல. என் சகோதிரியின் தலையீடு இல்லாமல் இருந்தால் எனக்கும், என் மனைவிக்கும் இடையே திருமண உறவு மீண்டும் நல்லபடியாக அமைவதற்கு வாய்ப்புகள் உள்ளது என்றால் இது பொய்யான குற்றச்சாட்டு, மனு பொய்யான மனு, நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படகிறது, மறு விசாரணை இல்லை.**